நகராட்சி அலுவலகம், நரசிங்கபுரம்
நாள் :

**கூட்டப் பொருள்**

நரசிங்கபுரம் நகராட்சி மன்ற கூட்டம் தனி அலுவலர் அவர்களால் 31–01–2019ஆம் தேதி மாலை 4.00 மணிக்கு இந்நகராட்சி அலுவலகத்தில் நடைபெறவுள்ள கூட்டத்தின் மன்றப்பொருள்.

தனிஅலுவலர்,
நரசிங்கபுரம் நகராட்சி.

**பொருள் : 1**

நரசிங்கபுரம் நகராட்சியில் தூய்மை பாரத இயக்கம், திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ்கண்ட விபரப்படி பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.1191/2019/பி3, நாள்.21.01.2019ன்படி கீழ்கண்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | 6 எண்ணிக்கையில் பேட்டரியினால் இயங்கும் வண்டி (BOV) கொள்முதல் செய்யும் பணி | 10.80 |
| 2 | 2 எண்ணிக்கையில் இளரக வணிக வாகனம் (LCV) கொள்முதல் செய்யும் பணி. | 11.20 |
| | **மொத்தம்** | **22.00** |

மேற்கண்ட பணிக்கு ரூ.20.00 இலட்சத்திற்கு மத்திய அரசு பங்குத் தொகை 35%, மாநில அரசு பங்குத் தொகை 55% மற்றும் நகராட்சி பங்குத் தொகை 10% செலவினம் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. கூடுதல் செலவினம் வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.
3. மேற்கண்ட பணிக்கு பணியின் அவரசர அவசியம் கருதி நகரமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 2**

நரசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் உபயோகத்திற்கு பயன்படுத்தப்பட்டு வரும் வார்டு எண்.1 முதல் 9 வரையுள்ள போர்வெல் மோட்டார், கிணற்று மோட்டார், சிறு விசை மின்மோட்டார், சம்ப் மோட்டார் ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்ய 2018–19ஆம் ஆண்டிற்கு தொகை ரூ.5.00 வட்சத்திற்கு இந்நகரமன்றத் தீர்மான எண்.19, நாள்.08.02.2018ல் அனுமதி வழங்கி வேலை உத்திரவு வழங்கப்பட்டு பணிமேற்கொள்ளப்பட்டது. மேற்படி தொகை முழுமையாக செலவினம் செய்யப்பட்டுள்ளதால் 02/2019 மற்றும் 03/2019 ஆகிய இரண்டு மாதங்களுக்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 3**

நரசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் உபயோகத்திற்கு பயன்படுத்தப்பட்டு வரும் வார்டு எண்.10 முதல் 18 வரையுள்ள போர்வெல் மோட்டார், கிணற்று மோட்டார், சிறு விசை மின்மோட்டார், சம்ப் மோட்டார் ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்ய 2018–19ஆம் ஆண்டிற்கு தொகை ரூ.5.00 வட்சத்திற்கு இந்நகரமன்றத் தீர்மான எண்.19, நாள்.08.02.2018ல் அனுமதி வழங்கி வேலை உத்திரவு வழங்கப்பட்டு பணிமேற்கொள்ளப்பட்டது. மேற்படி தொகை முழுமையாக செலவினம் செய்யப்பட்டுள்ளதால் 02/2019 மற்றும் 03/2019 ஆகிய இரண்டு மாதங்களுக்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 4**

நரசிங்கபுரம் நகராட்சிக்கு காலைக்கதிர் மற்றும் தினமணி நாளிதழ்கள் ஜனவரி 2018 முதல் டிசம்பர் 2018 வரை சப்ளை செய்த வகையில் அதற்கான சந்தா தொகை வழங்க கோரி காலைக்கதிர் மற்றும் தினமணி நாளிதழின் ஏஜென்ட் திரு.கே.வி.சஞ்சீவி என்பவரிடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. பட்டியல் தொகை ரூ.5060/– வழங்க மன்றத்தின்அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 5**

நரசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16 காளியம்மன் கோவில் அருகில் ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 6**

இந்நகராட்சி **பொது நிதி 2018-19-**ஆம் ஆண்டின் கீழ் கீழ்கண்ட பணிகளுக்கு 23.01.2019ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | அதிகம் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | நரசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16 காளியம்மன் கோவில் அருகில் ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் அமைக்கும் பணி | 3.50 | எம்.ஆறுமுகம் | -0.01% குறைவு |
| | | | பி.பெரியசாமி | 0.37% அதிகம் |

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **திரு.எம்.ஆறுமுகம்** ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட பணிகளுக்கு பணியின் அவரசர அவசியம் கருதி நகரமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டதை மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 7**

இந்நகராட்சி **பொது நிதி 2018-19-**ஆம் ஆண்டின் கீழ் கீழ்கண்ட பணிகளுக்கு 04.01.2019 மற்றும் 08.01.2019ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | அதிகம் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | நரசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14ல் குறிஞ்சி நகர் பகுதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான பூங்கா இடத்தை பாதுகாக்கும் பொருட்டு கம்பி வேலி அமைக்கும் பணி | 1.35 | கே.வரதராஜன் | -0.20% குறைவு |
| | | | கே.கணேசன் | 1.00% அதிகம் |
| 2 | நரசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7ல் ஜே.கே.நகர் பகுதியில் உள்ள ஆழ்துளை கிணறு மோட்டார் ஒயரிங் பழுது சரிசெய்தல், 8வது வார்டு புதிய வீட்டுவசதி வாரியம் மற்றும் கந்தசாமி நகர் பகுதியில் சிறுபாலம் அமைத்தல் மற்றும் இராசிபுரம் மெயின்ரோட்டில் ஸ்ரீராம் வீட்டின் முன்புறம் மழைநீர் வடிகால் அமைக்கும் ஆகிய பணி | 2.30 | கே.வரதராஜன் | -0.10% குறைவு |
| | | | கே.கணேசன் | 1.10% அதிகம் |
| 3 | நரசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5 மெயின்ரோடு அருகில் உள்ள ஆழ்துளை கிணற்றில் மின்மோட்டார் மற்றும் பைப்லைன் விஸ்தரிப்பு செய்யும் பணி | 3.75 | எம்.ஆறுமுகம் | -0.06% குறைவு |
| | | | பி.பெரியசாமி | 0.34% அதிகம் |

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட வரிசை எண்.1 மற்றும் 2 பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **திரு.கே.வரதராஜன்** ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட வரிசை எண்.3 பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **திரு.எம்.ஆறுமுகம்** ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
4. மேற்கண்ட பணிகளுக்கு பணியின் அவரசர அவசியம் கருதி நகரமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டதை மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 8**

நரசிங்கபுரம் நகராட்சி தொடரப்படும் அனைத்து விதமான வழக்குகளுக்கும் 2019–10 ஆம் ஆண்டிற்கு அரசு வழக்கறிஞர்களுக்கு வழங்குவதற்கு வழக்கு கட்டணம் ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 9**

நரசிங்கபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 6 வரையுள்ள பகுதிகளில் ஏற்படும் குடிநீர் குழாய் பழுதுகள் மற்றும் கேட்வால்வு பழுதுகள் சரிசெய்ய ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 10**

நரசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட 18 வார்டுகளிலும் உள்ள குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவுத் தொகை ரூ.7.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 11**

நரசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட பணிகள் 2019–20ஆம் ஆண்டு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை லட்சத்தில் |
|---|---|---|
| 1 | நரசிங்கபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 9 வரையுள்ள பகுதிகளில் நகராட்சிக்கு சொந்தமான போர்வெல் மோட்டார், கிணற்று மோட்டார், சிற விசை மோட்டார், சம்ப் மோட்டார்களில் ஏற்படும் பகுதுகளை சரிசெய்யும் பணி. | 5.00 |
| 2 | நரசிங்கபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.10 முதல் 18 வரையுள்ள பகுதிகளில் நகராட்சிக்கு சொந்தமான போர்வெல் மோட்டார், கிணற்று மோட்டார், சிற விசை மோட்டார், சம்ப் மோட்டார்களில் ஏற்படும் பகுதுகளை சரிசெய்யும் பணி. | 5.00 |
| 3 | நுரசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.1 முதல் 18 வரையுள்ள பகுதிகளில் உள்ள தெருவிளக்குகள் பராமரிப்பு செய்வதற்கு தேவையான பொருட்கள் சப்ளை செய்யும் பணி. | 5.00 |

**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் : 12**

நரசிங்கபுரம் நகராட்சியில் வரும் கோடை காலத்தை எதிர் கொள்ளும் பொருட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் குறுஞ்செய்தியின் படி வறட்சியை முன்னெச்சரிக்கை ஏற்பாடுகள் தீவிரப்படுத்தும் படி அறிவுரை வழங்கியுள்ளதினை கருத்தில் கொண்டு நரசிங்கபரம் நகராட்சி பகுதியில் வசிக்கும் பொது மக்களுக்கு தடையின்றி ஒரே சீரான குடிநீர் வழங்குவதற்கு ஏதுவாக கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.25.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | நரசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட 4வது வார்டு அரங்கபாலா நகர் பகுதியில் ஆழ்துளை கிணறு அமைக்கும் பணி. | 4.50 |
| 2 | நரசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட 9வது வார்டு புத்துமாரியம்மன் கோவில் பகுதியில் ஆழ்துளை கிணறு அமைக்கும் பணி. | 4.50 |
| 3 | நரசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட 10வது வார்டு கல்லுடைத்தான்மலை பகுதியில் ஆழ்துளை கிணறு அமைக்கும் பணி. | 4.50 |
| 4 | நரசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட 18 வார்டுகளிலும் தனியார் லாரி மூலம் தண்ணீர் விநியோகம் செய்யும் பணி. (ஏப்ரல் 2019) | 4.00 |
| 5 | நரசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட 18 வார்டுகளிலும் தனியார் லாரி மூலம் தண்ணீர் விநியோகம் செய்யும் பணி. (மே 2019) | 4.00 |
| 6 | நரசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட 18 வார்டுகளிலும் தனியார் லாரி மூலம் தண்ணீர் விநியோகம் செய்யும் பணி. (மே 2019) | 3.50 |

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை அரசு ஒதுக்கீடு செய்யும் (SDRF) வறட்சி நிவாரண நிதி அல்லது குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 13**

நரசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட 5வது வார்டு சேலம் கடலூர் மெயின் ரோடு இடுகாடு முன்புறம் உள்ள பம்ப் ரூம் பராமரிப்பு செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.75000/– த்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 14**

நரசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட 18 வார்டுகளிலும் உள்ள தெருவிளக்குகளை பராமரிப்பு செய்ய ஒப்பந்த அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள 9 மாத காலத்திற்கு ஆகும் செலவுத் தொகை ரூ.3.60 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகராட்சி அலுவலகம், நரசிங்கபுரம்**
**நாள் :**

**<u>கூட்டப் பொருள்</u>**

நரசிங்கபுரம் நகராட்சி மன்ற கூட்டம் தனி அலுவலர் அவர்களால் **09–01–2019**ஆம் தேதி மாலை **4.00** மணிக்கு இந்நகராட்சி அலுவலகத்தில் நடைபெறவுள்ள கூட்டத்தின் மன்றப்பொருள்.

**தனிஅலுவலர்,**
**நரசிங்கபுரம் நகராட்சி.**

**பொருள் : 1**

நரசிங்கபுரம் நகராட்சியில் மூன்றாவது திட்ட ஒப்புதல் மற்றும் கண்காணிப்புக்குழு, தலைமைச்செயலகம், சென்னை அவர்களின் கூட்ட அறிக்கையில் ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தி திட்டம் (IUDM) 2018- 19ன் கீழ் சாலை பணிகள் மேற்கொள்வதற்கு கீழ்கண்ட சாலைப்பணிகள் மேற்கொள்வதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | சாலையின் நீளம் | மதிப்பீட்டுத் தொகை ரூ இலட்சத்தில்) |
|---|---|---|---|
| | **சிப்பம் – I** | | |
| 1 | நரசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5, 7, 9, 13, 14 மற்றும் 16வது வார்டு ஆகிய பகுதிகளில் தார்சாலை அமைக்கும் பணி மற்றும் வார்டு எண்.3,4,5,6,7,8,11,12,16,17 மற்றும் 18 ஆகிய வார்டுகளில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிகள் செய்தல் | 4.679 | 194.00 |

மேற்படி திட்டத்தின் கீழ் மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்க கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு, சென்னை அவர்களுக்கு முன்மொழிவு அனுப்ப மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட சாலைப்பணிகளுக்கு மூன்றாவது திட்ட ஒப்புதல் மற்றும் கண்காணிப்புக்குழு, தலைமைச்செயலகம், சென்னை அவர்களின் கூட்ட அறிக்கையில் ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தி திட்டம் (IUDM) 2018- 19ன் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டத் தொகை ரூ.145.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
3. மீதம் உள்ள ரூ.48.50 இலட்சம் நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.